# தமிழ்மொழியும் இலக்கியமும்

## செயலட்டை 05 இலக்கியத்தொகுப்பு பகுதி III தரம் 10

## கம்பியூட்டர் சிறுகதை

1.கம்பியூட்டர் சிறுகதையின் ஆசிரியர் யார்? அது எத்தொகுப்பில் இருந்து இடம்பெற்றது?

2. “ **நண்பர் கம்பியூட்டருக்கு தலபுராணம் எழுதியவர் விடுவாரா..**”
   அ. தலபுராணம் என்பதன் கருத்து யாது?
   ஆ. தலபுராணம் என்பது இங்கே என்ன பொருளில் கையாளப்பட்டுள்ளது.

3. “ **முதல் நாளே நான் ஒரு பெரிய உண்மையை கண்டுபிடித்தேன் கணிப்பொறி என்பது ஒரு இராட்சத வேலைக்காரன்..** ”
   அ. இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
   ஆ. இராட்சதம் என்பதன் கருத்து?

4. “**அரவிந்தா, அரவிந்தா இங்க வா என்று யானை ஆதிமூலத்தை கூப்பிட்டது போல ஓலமிடுவாள்..** ”
   அ. இக்கூற்றைக் கூறியது யார்?

5. “ **இருதுபர்ணன் என்ற அரசன் தமயந்தியின் இரண்டாவது சுயம்வரத்தில் கலந்து கொள்ள தேரில் விரைகின்றான்...** ”
   அ. இவ்வடிகளில் வெளிப்படும் இலக்கியம் எது? அதன் ஆசிரிய யார்?

6. “ **இந்தக் கம்பியூட்டரும் அப்படித்தான் அட்ச இருதயக்கலையில் கைதேர்ந்ததாக இருந்தது...**”
   அ. அட்ச இருதயக்கலையுடன் தொடர்புடையவன் யார்?
   ஆ. அட்ச இருதயக் கலை என்றால் என்ன?

7. “ **என்னுடைய மகன் குவளை மலர்போன்ற கரு நீலக்கண்களை இன்னும் அகல விரித்து..** ”
   அ. இவ்வடிகளில் வெளிப்படும் அணியினை குறிப்பிடுக?
   ஆ. இங்கு மகன் என விளிக்கப்பட்டவன் யார்?

8. “ **விட்டிராதே விட்டிராதே பிடி என்று கத்தினேன்..** ”
   அ. இக்கூற்று யாரால் யாருக்கு எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

9. “ **என்னம்மா, நீங்க சும்மா சும்மா கூப்பிட்டு ட்ரபிள் கொடுக்கிறீர்கள்..** ”
   அ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
   ஆ. ட்ரபிள் என்பது குறித்து நிற்கும் பொருள் ?

10. “ **இந்தப் பைல் இஞ்ச எப்பிடி வந்தது...**”
   அ. பைல் என்பதன் தமிழ் வடிவம் யாது?
   ஆ. “**இஞ்ச எப்பிடி**” எனும் சொற்றொடரின் எழுத்து வடிவம் யாது?
   இ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

11. “**இப்படியாக சந்தி பிரிக்காத பாடல் போல தலை சுற்றியது விவகாரம்..** இங்கு சந்தி பிரிக்காத பாடல் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

12. **486 கம்பியூட்டர் என்று உச்சாடனம் செய்தவாறே அதன் வீரப்பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார்..**

அ. இதில் இடம்பெற்றுள்ள பிரபந்தம் எது?

ஆ. உச்சாடனம் என்பது உணர்த்தும் கருத்து யாது?

இ. பரணி என்பதால் கருதப்படுவது யாது?

13. கதாசிரியருக்கு கணிப்பொறி செய்த நம்பிக்கைத் துரோகம் யாது?

14. இச்சிறுகதையில் இடம்பெறும் கதாபாத்திரங்களை குறிப்பிடுக.

15. இச்சிறுகதையில் இடம்பெறும் இலக்கியங்கள் எவை?

16. **" எமிரோவோரி என்பாள் எந்துண்டி வஸ்தி என்பாள்"**

அ. இக்கூற்று இடம்பெற்ற சிறுகதை யாது?

ஆ. இக்கூற்று யாருடைய கூற்று.

17 இச்சிறுகதையில் இடம்பெறும் நனவோடை கதைகள் எவை?

18. கம்பியூட்டரை கதாசிரியர் ஆண் பெண் என வகைப்படுத்தியது பற்றி கூறுக.

19. பின்வரும் நனவுகளும், இலக்கியப் பகுதிகளும் எடுத்துக்காட்டப்பட்ட சந்தர்ப்பங்களை விளக்குக?

20 கம்பியூட்டர் சிறுகதையில் கதாசிரியர் காட்டும் விழுமியம் சார் செயற்பாடுகள் எவை ?

21 கணிப்பொறியினால் ஏற்படும் நன்மைகள் யாவை என கதாசிரியர் கூறுகின்றார்.

22. கம்பியூட்டர் வரவால் வீட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?

23 கணிப்பொறி பற்றி கதாசிரியரின் கருத்து யாது?

24. இச் சிறுகதையில் கம்பியூட்டர் எனும் தலைப்பின் பொருத்தப்பாடு பற்றி எடுத்துரைக்க?

25. சிறுகதையாசிரியரின் மொழிநடைச் சிறப்புக்களை எடுத்துக்காட்டுக.?